# மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் அபிவிருத்தி: ஓர் சமூகவியல் நோக்கு

**Mrs. Paheerathy Moses**

Senior Lecturer, Sociology and Anthropology, Department of Social Sciences
Faculty of Arts and Culture, Eastern University of Sri Lanka.
rathyms@yahoo.com

**Abstract:** அறிவியல் முன்னேற்றம் கண்டுள்ள சமகால உலகில் ஊடகங்களில் கணிசமான தாக்கத்தினை செலுத்திவருகின்றது. அதிலும் குறிப்பாக சமூக, அரசியல் பரப்பில் ஊடகங்களின் பங்கு கனதியானது. சமூகப் பரப்பில் தனிமனிதர்களுக்கிடையிலான உறவினை நெறிப்படுத்தி தொடர்பாடலினை விருத்தி செய்யும் ஒரு சக்தியாக ஊடகங்கள் விளங்குகின்றது. அதேவேளை அரசியல் பகுதியில் அன்றாட அரசியற் செயற்பாங்கின் நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்தும் முக்கிய கருவியாகவும் ஊடகங்களே தொழிற்படுகின்றன. இத்தகையதொரு பின்னணியில் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் அபிவிருத்தி குறித்த செல்நெறிகளை அடையாளப்படுத்த இக்கட்டுரை முயற்சிக்கின்ற போதிலும் ஆய்வு எல்லைப் பரப்பினை வரையறுத்துக் கொள்ளும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தினை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. ஆய்வுக்கான தரவுகள் பலதரப்பட்ட மூலாதாரங்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

**Keywords:** சமூக தொடர்பாடல், நவீன தொடர்பாடல், வெகுஜன ஊடகம், ஊடக ஒழுக்கம்

## 1. அறிமுகம்:

ஆதிமனிதன் ஈட்டி, கத்தி போன்றவற்றைக் கண்டுபிடித்து அவைகளைக் கொண்டு வேட்டையாடினான். அவ்வேளைகளில் தமது எண்ணங்களை பிறருக்கு தெரிவிக்க சமிக்ஞை மற்றும் சைகைகளை பயன்படுத்தினான். அவை பகல் நேரங்களிலேயே பயன் கொடுத்தது. இரவு வேளைகளில் பயனற்றதாக காணப்பட்டது. அதனால் இரவு வேளைகளில் ஒலியை பயன்படுத்தினான். நாளடைவில் அவ்வாறான ஒலிகளுடன் தனது குரல் வளத்தையும் பயன்படுத்தத் தொடங்கினான். கால ஓட்டத்தில் குரல்வளப் பாவனை பேச்சு மொழியாக பரிணமித்தது. குரல் வளத்தை தகவல் தொடர்புக்காக பயன்படுத்தும் வழக்கம் எந்த கால கட்டத்தில் ஏற்பட்டது என்பதை எவராலும் நிர்ணயித்துக் கூறமுடியாதுள்ள போதிலும், அதனூடாக பரிணமித்த மொழிகளின் தோற்றமும், அதன் பரிணாம வளர்ச்சியும், தகவல் தொடர்புக்கான ஆதார சக்தியாக விளங்குகின்றது. இவ்வுலகில் தற்பொழுது ஏறத்தாழ மூவாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் உள்ளன. வெவ்வேறு நாடுகளிலும் இடங்களிலும் வெவ்வேறு விதமான மொழிகளை அவர்களது வரலாறு, மரபுகள், வழக்காறுகளுக்கு ஏற்ப மக்கள் பேசுகின்றனர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சும் அதற்கான தாளும் அறிமுகமாகின்றன. அதன் காரணமாக தகவல் தொடர்பும் ஒரு புதிய பாதையைப் பெறுகின்றது. 'செய்தித்தாள்' என்ற வெகுஜன ஊடக கலாசாரம் தோற்றம் பெறுகின்றது. அது தகவல் தொடர்பின் புதுமையான பரிணாம வளர்ச்சிக்கு வித்திட்டது. அதன் தொடர்ச்சியாக அச்சுவழிச் சாதனங்கள் தோற்றம் பெற்று அச்சுக் கலைசார் வெகுஜன ஊடகங்களாக பரிணமித்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவியல் துறையில் முனைப்போடு செயற்பட்ட அறிவியல் அறிஞர்கள் சிலர் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து புதிய பல வடிவங்களில் தகவல் தொலைத் தொடர்புச் சாதனங்களைத் தந்துள்ளனர். அதன்காரணமாக தொலைபேசி, தொலைவரி, தொலை அச்சுக்கருவி, தொலைப் பதிவுக்கருவி போன்ற தொலைத் தொடர்புச் சாதனங்களும் தகவல் தொடர்பில் மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்கின.

இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் மேலும் பல முன்னேற்றங்களைக் கண்டது. அறிவியலின் இடைவிடாத வேகமான செயற்பாடானது தொழிற்புரட்சியின் அடிப்படையில் மின்னியல் தொழிநுட்பக் கருவிகளை தோற்றுவித்தது. தகவல் தொடர்பாடலிலும் மின்வழிச் சாதனங்கள் பயன்பாட்டுக்கு வரத் தொடங்கின. அவற்றில் வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, ஒளிப்படம், இணையம் போன்றவை குறிப்பிட்டுச் சொல்லப்படக்கூடியவை. மின்னணுவியல் வளர்ச்சி தகவல் தொடர்புத் துறையில் புதிய பல உத்திகளைப் புகுத்தியதோடு விரைவாக, நுணுக்கமாக செயற்படவும் காரணமாக அமைந்தது.

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கும் போது கணினி, தொலைபேசி, செயற்கைக்கோள் என்ற முப்பெரும் தொடர்பாடல் முறைகளை உள்வாங்கி இணையம் என்ற பெயரோடு உலகளவிலான தொடர்பாடல் பாவனை முறையாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைய இந்த பாவனையானது தகவல் தொடர்பின் உலகளாவிய தகவல் வலையமைப்புக்களை இணைக்கும் பன்முகப்பட்ட தகவல் தொடர்பாடல் முறையாக கருதப்படுகிறது. அறிவியல் புரட்சியின் காரணமாக சமூகத்தின் சகல அம்சங்களிலும், மட்டங்களிலும் வெகுஜன ஊடகங்களின் பங்களிப்பு அல்லது பயன்பாடு பரவலாக அதிகரித்துச் செல்கின்றது. சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, அரசியல் வாழ்க்கைப் பயன்பாட்டுப் பிரிவு மாற்றங்களுக்கும் சீர்திருத்தங்களுக்கும் முன்னேற்றங்களுக்கும் முக்கிய கருவியாக அமைவது தகவல் தொடர்பும் அதனை மேற்கொள்ளும் வெகுஜன ஊடகங்களுமாகும்.

**சமூக தொடர்பாடல்:** மனிதன் ஒரு சமூக விலங்கு (Social Animal)என்றார் அரிஸ்ரோட்டில். ஒரு குறிப்பிட்ட காரண காரியங்களுக்காக மனித இனங்களும் குடும்பங்களும் ஒன்று சேர்ந்து பொதுவான ஆர்வத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. அதனூடாக தொடர்பாடல் ஏற்படுத்தப்படுகின்றது. ஏனெனில் குடும்பமாக, குழுவாக, சமூகமாக சேர்ந்து வாழும் மனிதனுக்கு தொடர்பாடல் அவசியமானதொன்றாகிவிடுகின்றது. ஒருவர் தன்னுடைய எண்ணங்களையும் நோக்கங்களையும் மற்றொருவருடன் அல்லது பலருடன் பகிர்ந்து கொள்வதே தொடர்பாடலின் அடிப்படை. அது தகவல், கருத்து, உணர்ச்சி என எதுவாகவும் இருக்கலாம்.

**தகவல் தொடர்பாடலின் வளர்ச்சிநிலை:** தகவல் தொடர்பு என்பது அனுப்புபவரிடமிருந்து பெறுபவருக்குத் தகவல் அனுப்பும் ஒரு செயன்முறையாகும். எந்தவொரு தகவல் தொடர்பிலும் தோற்றுவாய் (Source),தகவல் (Message), பெறுநர் (Receiver )ஆகிய மூன்று கூறுகள் (Elements)அமைந்திருக்கும்.மனிதனின் தகவல் தொடர்பு வளர்ச்சியை புதைபடிவங்களின் துணை கொண்டு அறிவியலாளர்கள் கால வரிசைப்படுத்துகின்றனர். அவை குறி, சமிக்கைகளின் காலம்(The age of signs and signals), பேச்சு மொழிகளின் காலம் (The age of speech and languages), எழுத்தின் காலம்(The age of writing), அச்சுக்கலையின் காலம் (The age of printing), மக்கள் தொடர்பியலின் காலம் (The age of mass communication) என்பவைகளாகும்.

**அரசியல் சமூக தொடர்பாடல்:** நாட்டின் அனைத்துத் துறைகளும், அம்சங்களும் சமூக முன்னேற்றத்திற்காக முழு மூச்சுடன் ஈடுபட வேண்டிய இன்றைய சூழலில் சகலதுறை சார்ந்ததாகவும் வெகுஜன ஊடகங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மக்கள் அவற்றினை விரும்பியோ விரும்பாமலோ பற்றிக்கொண்டே வாழ்கின்றனர். ஒருவரோடொருவர் இணைந்து நெருங்கிய தொடர்புடன் வாழும் மக்களிடையே நிகழும் கருத்துப் பரிமாற்றந்தான் சமூக வளர்ச்சிக்கு உதவுகின்றது. இந்தக் கருத்துப் பரிமாற்றம் சமூகக்கட்டுப்பாடுகளுக்கும் வரன்முறைக்கும் உட்பட்டதாகும். இந்த கருத்துப் பரிமாற்றங்களின் வாயிலாகவே பல அமைப்பு முறைகள் (Organizations)உருவாகின்றன. இவை பல்வேறு விதமான சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. அவ்வாறான மாற்றங்களின் அடிப்படையில்தான் அரசும் அது சார்ந்த துறைகளும் அமைகின்றன.

நவீன அரசியல் சமூகத்தில் தொடர்பாடலானது பாரிய தாக்கம் மிக்கதொரு கருவியாக காணப்படுகின்றது. அதன் காரணமாக அரசியல் சமூகத்தில் தொடர்பாடலை மேற்கொள்ளும் வெகுஜன ஊடகங்களும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. மானுடக் குழுமங்களுக்கிடையிலான உணர்வுப்பரிமாற்றங்கள் முன்பு சிறியளவில் குறுகிய பரப்பினுள், பாரம்பரிய ஊடகங்களின் வழியே நிகழ்த்தப்பட்டு வந்தது. கால மாற்றங்களுக்கேற்ப தொடர்பாடல் முறைமையிலும் கணிசமான விருத்திப் படிநிலைகள் ஏற்படலாயின. அதனால் முன்னரைவிட இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடற் செயன்முறையின் முக்கியத்துவம் மிக அதிகமான அளவில் உணரப்படுகிறது. அதன்காரணமாக இன்றைய அரசியல் சமூகவியலாளர்கள் அரசியல் தொடர்பாடலின் அவசியப்பாட்டை பல்வேறுபட்ட முறைகளிலும் ஆய்வுக்குட்படுத்துகின்றனர்.

தகவல் செயற்பாட்டினை நிர்வகிப்பதிலும் செயற்படுத்துவதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் தடைசெய்வதிலும் குறித்தநாட்டு அரசினது பங்கு முக்கியமானதாகும். தகவல் தொடர்புக்குத் தேவையான பொறுப்புக்களையும் உரிமைகளையும் வரையறுக்கும் சட்டங்களை உருவாக்குவது அரசின் கடமையாகும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத்தியில் வெகுஜன தொடர்புச் சாதனங்கள் மீது பல்வேறுபட்ட கட்டுப்பாடுகளையும் அரசு திணிக்கின்றது. அதனால் ஊடகங்களின் சுதந்திரமான வெகுஜன செயற்பாட்டில் இடையூறுகளும் ஏற்படுகின்றன. ஜனநாயக ஆட்சி இடம்பெறுகின்ற ஒரு அரசில் சட்டம், நீதி, நிர்வாகத்துறை ஆகியவை முதல் மூன்று

தூண்களாகவும் வெகுஜன ஊடகங்கள் நான்காவது தூணாகவும் சொல்லப்படுகின்றது.இதனூடாக ஊடக சுதந்திரம் என்பது குறித்துரைக்கப்படுகிறது.

இதனடிப்படையில் ஒரு ஜனநாயக நாட்டில் ஊடக சுதந்திரம் என்பது அடிப்படை அம்சங்களிலொன்றாக அமைந்துவிடுகிறது. ஆனால் ஜனநாயக ஆட்சி என சொல்லிக் கொள்ளும் சில நாடுகளில் காணப்படும் பிறழ்வான ஆட்சி அதிகார முறைகளிலும் கம்யூனிசம், பாசிசம், இராணுவவாதம் என தொடரும் ஆட்சி முறைமைகளிலும் இதனது செயற்பாடானது சீரற்ற விதத்தில் காணப்படுகின்றது. அதனால் அரசியல் சமூக தொடர்பாடல் என்பது சர்ச்சைக்குரிய ஆய்வு விடயமாக மாறிவிடுகிறது.

அரசியல் சமூக தொடர்பாடல் என்பது சமூகமயமாக்கம்(Socialization)பங்குபற்றல் (Participation), ஆட்சேர்ப்பு (Recruitment) போன்ற செயல் முறைகளுடனும், அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், நலன்பேண் குழுக்கள் போன்ற நிறுவன அம்சங்களுடனும், பத்திரிகை, வானொலி தொலைக்காட்சி மற்றும் மின்னியல்சார் ஊடகங்களுடனும் தொடர்புடையதாக விருத்தியடைந்துள்ளது. அல்தொவ் (Althoff) மற்றும் ரஷ் (Rush) என்போரினால் "அரசியல் தொடர்பாடல் என்பது அரசியல் ஒழுங்கின் (Political order)ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கும், சமூக, அரசியல் முறைகளுக்கிடையிலும் அரசியல் ரீதியில் பொருத்தமான தகவல்களை பரப்புதல்"என்பதாக வரையறுக்கப்படுகிறது. கார்ல் டபிள்யூ. டியூஜ் (Karl W. Deutsch)"ஓர் அரசியல் ஒழுங்கின் இயக்காற்றல் வாய்ந்த ஆக்கக்கூறே (dynamic element) அரசியல் தொடர்பாடல் ஆகும்" என்று சுருக்கமாகவும் அதேவேளை தெளிவாகவும் வரையறுத்திருப்பதும் நோக்கத்தக்கதாகும்.

மேலே விபரித்த அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் பங்கு அல்லது தாக்கம் குறித்த ஆய்வுகள் மேற்கு நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் எம்மிடையே அவ்வாறானதொரு நிலை காணப்படவில்லை. அதனைக் கருத்திற் கொண்டு இவ்வாறானதொரு ஆய்வை மேற்கொள்ள துணிந்துள்ளேன். அதற்கமைய "மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் அபிவிருத்தி - ஓர் சமூகவியல் ஆய்வு" என்பதை எனது ஆய்வுப் பொருளாக்கியுள்ளேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் வகிபாகத்தை எடுத்துக்கூறும் புலமைசார் ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அந்தவகையில் இவ்வாய்வானது இத்துறைசார்ந்த அரசியல் சமூகவியல் ஆய்வுகளுக்கு முன்னோடியான ஒன்றாகவும் சமூக பிரஞ்ஞையையும் (Social Consciousness)விழிப்புணர்வையும் (Eye Opener) ஏற்படுத்தக்கூடியதொன்றாகவும் அமையும் என எதிர்பார்க்கலாம்.

**2. ஆய்வின் முறையியல்:**

இதனை தரரீதியான ஆய்வு (Qualitative Research) தொகைரீதியான ஆய்வு (Quantitative Research) என இருவேறாக வகைப்படுத்தலாம். இவற்றுள் இவ்வாய்வுக்கு இரு ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதற்குக்காரணம் ஆய்வுக்கு இவற்றின் பரஸ்பர பங்களிப்பாகும். மேற்சொன்ன முறையியல்களின் அடிப்படையில் முதனிலைத்தரவுகள் (Primary data),இரண்டாம் நிலைத்தரவுகள் (Secondary data) ஆகிய இருவகையிலும் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாய்விற்கு முதனிலைத் தரவுகளை பெறும் பொருட்டு நேர்காணல், அவதானித்தல், கலந்துரையாடல், வினாக்கொத்து போன்றவை பின்பற்றப்பட்டுள்ளன. அதனடிப்படையில் இப்பிரதேசத்திலுள்ள அரசறிவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் போன்றோர்களிடமிருந்தும் கட்சிகள், குழுக்கள், சமூக நிறுவனங்கள், ஏனைய அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வினைப் பொறுத்த வகையில் பல்வேறு இடங்களிலிருந்தும் பெறப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பதிவேடுகள், புள்ளிவிபரங்கள், கட்டுரைகள் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி வெளியீடுகள் (Output - Programmes) என்பவற்றின் மூலம் பெறப்படும் தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகளாக (Secondary data) கொள்ளப்பட்டுள்ளன.

மனித வாழ்வியலுடனும் நாகரீக வளர்ச்சியுடனும் மருவி வருகின்ற அரசியல் சமூக தொடர்பாடலும் வெகுஜன ஊடக கலாசாரமும் காலவரையறைகளுக்குள் இலகுவில்

கட்டுப்படாதவையாகும். தொடர்ந்து பாயும் நீரோட்டம் போன்ற இவற்றை காலரீதியாகப் பிரிப்பது சிலசமயங்களில் செயற்கையானதாகவும், பொருத்தமற்றதாகவும் அமைந்துவிடும். இருப்பினும் புலமைசார் வரையறைகளுக்குட்பட்டு ஆய்வின் அர்த்தம், ஆழம், இறுக்கம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வு ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறிற்கு (1990) பிந்திய காலப்பகுதியையே பெருமளவுக்குக் கருத்தில் கொள்கிறது.

சிவில் யுத்தம் தீவிரம் பெற்று பல்வேறு நெருக்கடிகளும் பிரச்சினைகளும் உருவாகிய இக்காலப்பகுதியிலேயே அரசியல் சமூகத் தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களும் தாக்கம்மிக்க வகிபாகத்தை செலுத்தின. ஆயினும் சிக்கல்களும் சர்ச்சைகளும் நிறைந்த இவ்வகிபாகத்தை ஆராயும்போது நாம் வகுத்த காலவரையறையைக் கடந்து தவிர்க்க முடியாதபடி மட்டக்களப்பின் வரலாற்று மூலங்களுக்குள்ளும் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்குள்ளும் அடிக்கடி ஊடுருவிச் செல்லவேண்டியதாக இருந்தது. அதன் காரணமாக ஆய்வுத் தலைப்பில் ஆய்வின் காலப்பகுதி அறுதியிட்டுக் கூறப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

### 3. முடிவுகளும் முன்மொழிவுகளும்:

மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் அபிவிருத்தி ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டு பல்வேறுபட்ட நிலைகளிலிருந்து பெற்ற தரவுகளையும் தகவல்களையும் பகுத்தாராய்ந்ததனூடாக சில பிரச்சினைகளும் சவால்களும் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றினடிப்படையில் முடிவுகளும் முன்மொழிவுகளும் முன்வைக்கப்படுகின்றன. பக்க எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுவதால் ஆய்வின் முடிவுகளை விளங்கிக் கொள்வதற்காக அவசியம் என கருதப்படும் இவை தரப்படுகின்றன.

### 4. பிரச்சினைகளிலும் சவால்களும்:

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஊடகப் பணியானது தெளிவற்ற தன்மைகளுக்கூடாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளது. 1990க்குப் பின்னரான ஊடக செயற்பாட்டை நோக்கும்போது ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நெருக்கடிகள் மற்றும் உயிர் அச்சுறுத்தல்மிக்க காலமாகவே காணப்பட்டுள்ளது. அதனால் இங்கு பணியாற்றிய ஊடகவியலாளர்கள் தம்மை இனங்காட்டாமல் பணிகளை ஆற்றியுள்ளார்கள். போர், இராணுவ நடவடிக்கை, பாதுகாப்புக்கெடுபிடி, தாக்குதல், சுட்டுக்கொலைசெய்தல், கடத்துதல், மிரட்டல், கப்பம்பெறல், ஆயுதமுனையில் கொள்ளை, பலாத்காரம், வன்முறை போன்ற சம்பவங்களைப்பற்றிய செய்திகளை தம்மை இனங்காணாத வகையிலேயே வெளியிட்டுள்ளனர். அதனால் புனைபெயர் கலாசாரம், இனங்காட்டாமல் பணியாற்றும் போக்கு போன்ற மறைமுக பணிகளே தொடர்ந்துள்ளன. அதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட வெகுஜன ஊடகங்களின் பணிகளைப்பற்றி பூரணமாக அறிவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.
இதுபோன்ற காரணங்களால் வெகுஜன ஊடகங்களின் பணியானது மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் போதிய அபிவிருத்தியை ஏற்படுத்தவில்லை என கூற முடிகிறது. இதற்கு தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான பிரச்சினைகளும் சவால்களுமே பிரதான காரணங்களாக அமைந்துள்ளமை வெளிப்பட்டுள்ளது.

மட்டக்களப்பின் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்கள் எதிர் நோக்கிய அவ்வாறான பிரச்சினைகளையும் சவால்களையும் ஆராயும்போது முதலாவதும் முக்கியமானதுமான பிரச்சினையாகக் காணப்படுவது இனமுரண்பாடாகும். அடுத்த முக்கிய பிரச்சினையாகக் காணப்படுவது மொழிவேறுபாடாகும். இவை தவிர்ந்த ஏனைய பல அரசியல், சமூக, பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

இனப்பிரச்சினை வெகுஜன ஊடகங்களின் செயற்பாட்டை அதிகமாகத்தாக்கி பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மூலமும் அவற்றினது செயற்றிறனை தடைசெய்துள்ளது. அதன் காரணமாக அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்கள் தமது பூரண பங்களிப்பை வழங்கவில்லை. இனமுரண்பாடு நிலைகொண்டிருந்ததன் காரணமாக இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் கொலை, அவர்களின் வெளியேற்றம், செய்தித்தணிக்கைகள், ஊடகநிறுவனங்கள் மீதான தடைகள், வன்முறைகள் போன்றவற்றால் மட்டக்களப்பில் வெகுஜன ஊடகங்களின் ஊடாக அரசியல் சமூக தொடர்பாடலை மேற்கொள்வதில் சவால்கள் காணப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் தமிழ்மொழி பேசுவோரைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசமாகும். தமிழ் மக்களுடன் தமிழ்மொழியில் தொடர்புகளைப் பேணவும் சகல படிவங்களிலும் அறிவித்தல்களிலும் தமிழும் இடம்பெற வேண்டுமென்பது அரசாங்கம் வெளியிட்டுள்ள கொள்கை விதிமுறை ஆகும். இவை எவையும் மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழில் தமது வெளியீடுகளை வெளிக்கொண்டுவரும் வெகுஜன ஊடகங்களை மட்டுமே மட்டக்களப்பு

மக்கள் அதிகமாக பயன்படுத்துகின்றனர். அவையே மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுமுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் நிலஅமைவின் அடிப்படையில் படுவான்கரை - எழுவான்கரை என இரு பெரும்பிரிவுகளாக பகுக்கப்பட்டிருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்களில் அதிகமானோர் மட்டக்களப்பு நகரத்தை அண்டியவர்கள். அதன் காரணமாக அரசியல் சமூக தொடர்பாடல் என்பது எழுவான்கரைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. அதனால் அரசியல் சமூக தொடர்பாடலானது மட்டக்களப்பு மக்கள் அனைவருக்குமாக சமூகமயப்படுத்தப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பௌதீக சூழலும் அரசியல் சமூகத் தொடர்பாடலை மட்டுப்படுத்துகின்றது. இயற்கை அனர்த்தங்களால் மட்டுமன்றி, குறுகிய நோக்குடனான செயற்கையாகச் சிருஷ்டிக்கப்பட்ட அனர்த்தங்களாலும் வெகுஜன ஊடகங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

அரசியல் பிரமுகர்கள் தமது இருப்பு, குறுகிய கட்சி இலாப நோக்கு என்பவற்றுக்கு ஏற்ப நடவடிக்கைகளை முன்னெடுத்து மட்டக்களப்பு சமூகத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் வெகுஜன ஊடகங்களின் சுதந்திரமான செயற்பாட்டில் தலையிட்டு அவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் ஜனநாயக சூழலையும் இல்லாதொழித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பிட்ட சாதி மக்கள் மத்தியிலிருந்து வெளிவருகின்ற அரசியல் பிரமுகர்கள் தத்தமது சாதிக்கு முன்னுரிமை கொடுத்து அரசியல் செயற்பாடுகளை செய்து வந்துள்ளனர். இவ்வாறான பின்னணியிலேயே மட்டக்களப்பு மாவட்ட அரசியல் சமூக தொடர்பாடல் தொடர்ந்திருக்கின்றது. இதனையே அவ்வக்காலத்து வெகுஜன ஊடகவியலாளர்களும் கைக்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு அரசியல் பிரமுகர்களில் அதிகமானோர் தமது துறைசார்ந்த போதிய அனுபவம் பெற்றவர்களாக காணப்படவில்லை. ஒவ்வொருமுறை தேர்தலின் போதும் மக்களிடம் வாக்குறுதிகளைக் கொடுத்து வாக்கைப் பெற்ற பின்னர் மக்களைப் பற்றிச் சிந்திக்காத அல்லது கவனிக்காத போக்கே மட்டக்களப்பில் காணப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்களில் அதிகமானவர்கள் இளம் தலைமுறையினராகும். அவர்களில் அனேகர் ஊடகத்துறை அனுபவமும் அரசியல் அறிவும் இல்லாதவர்களாகவே உள்ளனர். இந்நிலைகளும் மட்டக்களப்பின் அரசியல் சமூக தொடர்பாடலில் தாக்கம் செலுத்தியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல் சமூக தொடர்பாடலில் துப்பாக்கிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அரசியல் பிரமுகர்கள் தமது பிரதேச மக்கள் மீதும் அவர்களது வாக்குகள் மீதும் வைத்துள்ள நம்பிக்கையைவிட ஆயுதத்தின் மீதே அதிகளவான நம்பிக்கை கொண்டுள்ளனர். அதனால் ஆயுதரீதியிலான வன்முறைகள் அதிகரித்து காணப்பட்டுள்ளன. இது அரசியல் சமூக தொடர்பாடலில் வக்கிரத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்புக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடையிலான போக்குவரத்துத் தடை பத்திரிகை விநியோக செயற்பாட்டை முற்றாக பாதித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூர் போக்குவரத்துச் சீர்கேடுகள் வெகுஜன ஊடகங்களின் பணிகளை பாதிப்படையச் செய்துள்ளன. இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் சமூக தொடர்பாடல் சவால்களை எதிர்கொண்டுள்ளன.

### 5. சிபார்சுகளும் தீர்வுகளும்:

மேற்குறித்த பிரச்சினைகளிலும் சவால்களிலிருந்தும் மீள்வதற்கான தீர்வாக பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் வகிபாகம் எவ்வாறு அமைய வேண்டும், அரசியல் சமூக தொடர்பாடலின் பயனுறுதிக்கு வெகுஜன ஊடகங்களின் பங்களிப்பு எவ்வகையில் வழங்கப்படுதல் வேண்டும், நடைமுறைச்சாத்தியமான சமூகநலன் கருதிய வெகுஜன ஊடகங்களின் செல்நெறிக்கான வழிமுறைகள் எவை என்பவற்றின் அடிப்படையில் நோக்கப்பட்டு சிபார்சுகளும் தீர்வுகளும் முன்வைக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தினது வெகுஜன ஊடகங்களின் வளர்ச்சிப் போக்கானது ஒருமுகப்பட்ட சீரான தன்மையுடையதாக காணப்படவில்லை. மட்டக்களப்பு சமூகத்தினர் தமது வசதி, வாய்ப்பு

என்பவற்றிற்கு ஏற்ப இவற்றை பயன்படுத்தியுள்ளனர். பத்திரிகையே மட்டக்களப்பில் அதிகமானோரால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் மட்டக்களப்பின் அரசியல் சமூக தொடர்பாடலில் தேக்கநிலை மற்றும் தெளிவற்றதன்மை மேலோங்கி காணப்பட்டிருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் வெகுஜன ஊடகப்பரப்பில் புனைபெயர் கலாசாரம், இனங்காட்டாமல் பணியாற்றும் போக்கு போன்ற மறைமுக இயல்புகளே இன்றும் தொடர்வதனை காணமுடிகின்றது. அதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட வெகுஜன ஊடகங்களின் பணிகளைப்பற்றி பூரணமாக அறிவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் வெகுஜன ஊடகங்களின் பணியானது மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் போதிய அபிவிருத்தியை ஏற்படுத்தவில்லை என்பது உண்மையாகும். இதற்கு தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான பிரச்சினைகளும் சவால்களுமே பிரதான காரணங்களாக எம்மால் இனங்காணப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் வெகுஜன ஊடகங்களின் ஊடாக அரசியல் சமூகதொடர்பாடலை மேற்கொள்வதில் ஏற்பட்ட தடைகளுக்கு இனமுரண்பாடே பிரதான காரணம். இதனால் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் கொலை, அவர்களின் வெளியேற்றம், செய்தித்தணிக்கைகள், ஊடகநிறுவனங்கள் மீதான தடைகள், வன்முறைகள் போன்ற விரும்பத்தகாத விளைவுகள் இடம்பெற்றுள்ளன. வெகுஜன ஊடகங்களினூடாக சிறந்த அரசியல் சமூக தொடர்பாடலை மேற்கொள்வதற்கு இங்கு குறிப்பிட்ட விளைவுகளுக்கான காரணங்கள் இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். எனவே இவற்றுக்கு அடிப்படையாக உள்ள இலங்கையின் இனமுரண்பாடும் அதனோடிணைந்த பிரச்சினைகளும் நீதியான முறையில் தீர்த்துவைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தமிழ்மொழி பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கும்போது 99 வீதத்திற்கும் அதிகமானோர் தமிழ் மொழியை பேசுகின்ற மட்டக்களப்பு மாவட்டத்தில் மொழி சார்ந்த வெகுஜன ஊடக செயற்பாடும் அவற்றினூடான அரசியல் சமூக தொடர்பாடலும் தமிழ்மொழியிலேயே ஆற்றப்படவேண்டியது அவசியமாகும். இதன்மூலம் மொழிரீதியான முரண்பாட்டால் ஏற்படும் ஆரோக்கியமற்ற அரசியல் சமூக தொடர்பாடலை தவிர்த்து வெகுஜன ஊடகங்களின் வகிபங்கோடு சிறந்ததொரு அரசியல் சமூக தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்.

மட்டக்களப்பு பிரதேசம் தமிழ் பேசுவோரான தமிழரையும் முஸ்லிம்களையும் கொண்ட பிரதேசம். ஆனால் இது நிலஅமைவின் அடிப்படையில் படுவான்கரை - எழுவான்கரை எனவும் முஸ்லிம்கள் மட்டும் செறிந்து வாழும் பிரதேசம் எனவும் அரசியல் பிரமுகர்களால் நோக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். வெகுஜன ஊடகங்களும் அரசியல் சமூக தொடர்பாடலை சீராகப்பேண பிரதேசரீதியிலான நில அமைவு வேறுபாட்டை கருத்தில் கொள்ளாது செயற்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தனித்துவமான சூழலியலைக் கருத்திற் கொண்டு அதற்கேற்ப அரசியல் சமூக தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டிய தார்மீக கடமையை வெகுஜன ஊடகங்கள் கைக்கொள்ள வேண்டும். அதன்மூலம் சூழல் சார்ந்த பிரச்சினைகளால் வெகுஜன ஊடகங்களுக்கு ஏற்படும் தடங்கல்கள் அதன்மூலம் அரசியல் சமூக தொடர்பாடலில் ஏற்படும் பாதிப்புக்கள் என்பவற்றை தவிர்த்து மட்டக்களப்பு சமூகத்தில் சிறந்த பயனுள்ள அரசியல் சமூக தொடர்பாடலை பேண முடியும். அதன்மூலம் மட்டக்களப்பில் சமூகப் பிறழ்வு மற்றும் சீர்குலைவுகளை தவிர்த்து சமூக நிலையினர் ஒவ்வொருவரும் இந்நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் சமூக அரசியல் தொடர்பாடலை பேண வழிவகுக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பால் மற்றும் பால்நிலை என்ற கருத்துருவாக்கங்கள் மற்றும் சார்புநிலைகள் களையப்படவேண்டும். அரசியல் மற்றும் வெகுஜன ஊடக செயற்பாடுகளில் பெண்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அதேபோன்று பெண்களும் அரசியல் மற்றும் வெகுஜன ஊடகங்களில் தமது பங்களிப்பினை வழங்க முன்வருவதோடு அவர்களது குடும்பத்தினரும் அவர்கள் சார்ந்த சமூகத்தினரும் இவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தம்முடைய அதிகாரத்தை சட்டம், நீதி, நிர்வாகத்துறைகள் மீது எப்படியும் பிரயோகிக்கலாம் என்ற அரசியல் பிரமுகர்களின் அதிகாரநிலை மாற்றப்பட வேண்டும். அதேபோன்று ஊடகவியலாளர் என்ற அந்தஸ்துடன் மட்டக்களப்பில் அரசியல் பிரமுகர்களின் பிரசார நபர்களாக செயற்படும் ஊடகவியலாளர்கள் தமது சார்புநிலை செயற்பாடுகளை தவிர்க்கவேண்டும். அதேபோன்று இத்துறைகளில் பணியாற்றுவோரும் அரசியல் பிரமுகர்களின் சட்டரீதியற்ற அதிகாரநிலை செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் வழங்கக்கூடாது.

தேசிய மட்டத்தில் ஒலி மற்றும் ஒளிபரப்பை மேற்கொள்ளும் வானொலி, தொலைக்காட்சி சேவைகளில் தமிழ் அறிவு கொண்ட நிர்வாக அதிகாரிகளும் அறிவியலாளர்களும் நியமிக்கப்படல் வேண்டும். நிகழ்ச்சிகளை வழங்குவோர் கொச்சை மொழியும் மொழிப்பிறழ்வும் இடம்பெறாவண்ணம் அக்கறை காட்ட வேண்டும். இதன்மூலம் பிழையான கருத்துக்களும் தகவல்களும் மக்கள் மத்தியில் பரப்பப்படுவதையும் அதன்மூலம் அரசியல் சமூக தொடர்பாடலின் பின்னடைவையும் தடுக்கலாம்.

ஊடக வக்கிரம் காரணமாக அந்நியப்படுத்தப்பட்ட அல்லது ஒதுங்கிக் கொண்ட அனுபவம் வாய்ந்த மூத்த ஊடகவியலாளர்கள் மீண்டும் இப்பணியில் இணைந்து கொள்வதற்கான நிலைமைகள் உருவாக வேண்டும். அதேபோன்று இளந்தலைமுறை ஊடகவியலாளர்கள் அரசியல்சார் விடயங்களை அறிந்து கொள்வதோடு ஊடகத்துறை கல்வி மற்றும் தொழில்முறை சார்ந்த அனுபவங்களையும் பெறவேண்டும்.

ஊடகவியலாளர்கள் செய்திகளை சேகரிப்பதற்கும் செய்தி கிடைக்குமிடங்களை நோக்கிச் செல்வதற்கும் தகவல்களை சேகரிக்கச் செல்லும் ஊடக குழுவினர் ஊடக சாதனங்களை கொண்டு செல்வதற்கும் போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி அடையவேண்டும். அரசியல் பின்னணி காரணமாக சில ஊடகவியலாளர் மட்டும் போக்குவரத்து சலுகைகளை அனுபவிக்கின்ற நிலைமை மறைய வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தின் தனித்துவத்தையும், தேவைகளையும் எதிர்கால நலனையும் கருத்திற்கொண்டு பணியாற்றும் முற்போக்கான மனப்பான்மை ஊடகத்துறையில் ஏற்பட வேண்டும். இதில் அரசிற்கும் பெரும் பங்கு உள்ளது.

**6. ஆய்வின் பயன்பாடுகள்:**

இந்த ஆய்வின் பயன்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும். அரசியல் பிரமுகர்கள் சமூக தொடர்பாடலை சிறப்பாக மேற்கொள்ள துணைபுரியும். எதிர்கால அரசியல் சமூக தொடர்பாடலைச் சீர்படுத்தும். பல துறைசார்ந்த மாணவர்களின் கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு துணைபுரியும். ஊடக நிறுவனங்களும் ஊடகப்பணியாளர்களும் ஊடகநெறி அறிந்து பணியாற்றுவதற்கு வழியமைக்கும். மட்டக்களப்பு சமூகம் விழிப்படைந்து அரசியல் சமூகமயப்படுத்தப்பட தூண்டுகோலாக அமையும். அரசியல் சமூக தொடர்பாடல் ஊடக வாயிலாக நெறிப்படுத்தப்பட உதவும். சமுகத்தில் பிறழ்வு மற்றும் சீர்குலைவு ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும்.

**7. முடிவுரை:**

மேற்கூறிய அம்சங்கள் நிறைவேற்றப்படும் போது வெகுஜன ஊடகங்களின் பணி சமூகமயமாகும். அதன்காரணமாக அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளையும் கருத்தியல்களையும் வெகுஜனங்களின் மத்தியில் எடுத்துச் சென்று ஆதரவு திரட்ட முடியும், முரண்பட்ட அரசியல் கட்சிகளிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு முக்கிய பிரச்சினைகளில் பொதுநிலைப்பாட்டை ஏற்படுத்த முடியும், வெகுஜனங்களின் மத்தியில் அரசியல் விழிப்புணர்வையும் அரசியல் பங்குபற்றலையும் அதிகரிக்கச் செய்து அரசியல் சமூக தொடர்பாடலை வளப்படுத்த முடியும். இவற்றினூடாக சமூகத்தை ஊடக நெறிப்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்கள் வகிக்கும் பங்கினை பயனுறுதியுடையதாக மாற்றமுடியும்.

இவ்வாறான விருத்திகளின் மூலம் அரசியல் பிரமுகர்கள் சிறப்பான சமூக தொடர்பாடலை மேற்கொள்ள முடியும். எதிர்கால அரசியல் சமூக தொடர்பாடல் சீர்படுத்தப்படும். இது தொடர்பான கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் சுதந்திரமாக இடம்பெறும். ஊடக நிறுவனங்களும் ஊடகப்பணியாளர்களும் ஊடகநெறி அறிந்து பணியாற்ற வழியமைக்கப்படும். அரசியல் சமூக தொடர்பாடல் ஊடக நெறிப்படுத்தப்படும். மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூகப்பிறழ்வும், பின்னடைவும் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் அபிவிருத்தி பற்றிய ஆய்வை மேற்கொண்டமை மூலமாக சில சிபார்சுகளை முன்வைக்க முடிந்தது. அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் பங்களிப்பு இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் அதற்கும் மேலாக பல உலக நாடுகளிலும் விமர்சனத்துக்குரியதாகவே இருந்து வருகிறது. பொதுநோக்கில் அரசியல் சமூக தொடர்பாடலை நெறிப்படுத்துவதிலும், வலுப்படுத்துவதிலும் ஊடகங்கள் காத்திரமான பணியை ஆற்றத் தவறியுள்ளன. இதற்கு மட்டக்களப்பு மாவட்டமும் விதிவிலக்காக இருக்கவில்லை.

வெகுஜன ஊடகங்கள் அனைத்திற்கும் தேர்தல் காலங்களில் மட்டக்களப்பில் அதிகமான பொறுப்பேற்பட்டுள்ளது. இதுபோன்ற காலங்களில் அவை சமூக நெறிமுறையோடு செயற்பட வேண்டிய தேவை எம்மால் வலியுறுத்தப்படுகின்றது. சில வெகுஜன ஊடகங்கள் பக்கச்சார்பான கருத்துக்களை நடுநிலை கருத்தாகக்கூறி மக்களை அதன்பால் ஈர்த்திருக்கின்றன. அரசியல் பிரசாரங்களுக்கும் பிரமுகர்களுக்கு ஆதரவு தேடுவதற்கும் விளம்பரங்களை பயன்படுத்தியுள்ளனர். இதனால் ஈர்க்கப்பட்ட மட்டக்களப்பு சமூகத்தினர் அதில் ஈடுபட்டு வழிதவறியுள்ளதையும் அவதானிக்க முடிந்துள்ளது. இது மேலும் இடம் பெறுவதற்கான சாத்தியங்களே மட்டக்களப்பு சமூகத்தில் உள்ளன. அரசியல் மற்றும் வெகுஜன ஊடகங்களில் பௌத்த சிங்கள மேலாதிக்கம் நிலைத்துள்ளது. அதனால் இனரீதியில் அரசியல் முரண்பாடுகள் நிரந்தரமாகி உறுதியடையும் நிலையே காணப்படுகின்றது. மட்டக்களப்பு பிரதேசமும் இலங்கைத் தீவும் அபிவிருத்தி காணவேண்டுமெனில் இன மொழி மதம் சார்ந்த பிரச்சினைகள் ஜனநாயக வழியில் தீர்த்து வைக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் சமூக தொடர்பாடல் சமூக நெறிமுறையின் அடிப்படையில் இடம்பெற வேண்டும். வெகுஜன ஊடகங்கள் ஊடகநெறிமுறையின்படி பணியாற்ற வேண்டும். அரசியல் சமூக முரண்பாடுகள் மேலும் அதிகரித்துச் செல்வது அரசியல் தலைமைத்துவத்தின் தூர நோக்காலும் தரமான கொள்கைகளாலும் தடுக்கப்பட வேண்டும். இவற்றினூடாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் வகிபாகத்தை அர்த்தமுள்ளதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் மாற்ற முடியும் என்பது உறுதியாகத் தெரிகிறது.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் சமூகத் தொடர்பாடலுக்கும் வெகுஜன தொடர்புச் சாதனங்களுக்குமிடையில் நெருங்கிவரும் போக்கு அருகியும், துருவமயப்படுத்தப்பட்ட போக்கே பெருகியும் காணப்படுகின்றது. இது தொடர்பாகத் திருத்தமான நிலைமைகளும், பொருத்தமான நடவடிக்கைகளும் விருத்தியாகும் பட்சத்தில் அது மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக நல்வாழ்வை நோக்கிய ஒரு திருப்புமுனையாக அமையும் என கூறலாம்.

## 8. உசாத்துணைகள்:


DEXTER, L. & WHITE, D. (1964), People, Society and Mass Communications.Free Press: New York.

JOEL, SMITH. (1995), Understanding the Media - Sociology of Mass Communication. Hampton Press Inc., Crosshill: New Jersey.

KARL, W. DEUTCH. (1953), Nationalism and Social Communication, MIT Press: Cambridge.

PHILIP, ALTHOFF. & MICHEL, RUSH. (1971), Introduction to Political Sociology. Thomas Nelson & Sons Ltd: UK.

அந்தோனிமுத்து, பி. மட்டக்களப்பு மருத்துவச்சமூகம். மட்டக்களப்பு.

அரசரெத்தினம், எஸ். (2004, இலங்கை அரசியல் வரலாறும் பதின்மூன்றாவது பொதுத்தேர்தலும். பூபாலசிங்கம் புத்தகசாலை: கொழும்பு.

சிவசண்முகம், ஞா. (2000), மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும். விபுலம் வெளியீடு: மட்டக்களப்பு.

தனபாக்கியம், குணபாலசிங்கம். (1993), மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி. மட்டக்களப்பு.

லயனல்,குருகே. (2004), இலங்கையின் தேசிய இனத்துவப்பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்: கொழும்பு.